## எப்போது கதை நேரம் நடைபெறும்?

**மெரிலான்ட்ஸ் மத்திய நூலகம்**
ஒவ்வொரு செவ்வாய்கிழமையும்
வியாழக்கிழமையும் காலை 10.30 மணி

**வென்ட்வேத்வீலி கிளை நூலகம்**
ஒவ்வொரு புதன்கிழமையும் வியாழக்கிழமையும்
காலை 10.30 மணி

**கிறேய்ஸ்டேன்ஸ் கிளை நூலகம்**
ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் காலை 10.30
மணி

(விடுமுறை நாட்கள் தவிர)

**கதை நேர அமர்வுகள் கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் வரை நீடிக்கும்.**

**முன் பதிவுசெய்யத் தேவையில்லை**



## ஹொல்றோய்ட் நகர கவுன்சில் நூலக சேவை

**மெரிலான்ட்ஸ் மத்திய நூலகம்**
Cnr. Miller and Newman Streets
Merrylands
தொலைபேசி: 9840 9960
தொலைநகல்: 9840 9955

**நேரங்கள்:**

| | |
|---|---|
| திங்கள் – வெள்ளி | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மாலை 4.00 |
| ஞாயிற்றுக்கிழமை | மாலை 2.00 – மாலை 5.00 |

**கிறேய்ஸ்டேன்ஸ் கிளை நூலகம்**
732 Merrylands Road, Greystanes
தொலைபேசி: 9636 4160
தொலைநகல்: 9688 3061

**நேரங்கள்:**

| | |
|---|---|
| திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி | காலை 9.30 – மாலை 5.30 |
| வியாழன் | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மதியம் 12.00 |

**வென்ட்வேர்த்வீலி கிளை நூலகம்**
2 Lane Street, Wentworthville
தொலைபேசி: 9631 7564
தொலைநகல்: 9688 3168

**நேரங்கள்:**

| | |
|---|---|
| திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி | காலை 9.30 – மாலை 5.30 |
| வியாழன் | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மதியம் 12.00 |



Holroyd City
*Built Around People*

**ஹொல்றொய்ட் நகர கவுன்சில் நூலக சேவை பின்வருவனவற்றை வழங்குகிறது**

# முன்பள்ளி கதை நேரம்



# கதை நேரத்தில் என்ன நடைபெறும்?

கதை நேரத்தில் கதை நேர நூல் குழுமத்திலிருந்து கதைகள் வாசிக்கபடும் அத்துடன் பாட்டுகள் மற்றும் இலகுவான கைவினைகள் ஆகியவையும் நடைபெறும்.

ஒவ்வொரு வாரமும் வித்தியாசமான பொருள் பற்றிய கதைகள் வழங்கப்படும் அத்துடன் பாட்டுகளும் கைவினையும் நூலின் பொருள் சார்ந்ததாய் இருக்கும். உதாரணமாக, பண்ணை மிருகங்கள், வட்டரங்காட்டம், தொப்பிகள் ஆகியன.



கதை நேர அமர்வுகள் குறுகிய பிரசித்த வீடியோப் படங்கள், பலகையில் காய்களை நகர்த்துவதன் மூலம் கதை சொல்தல், அல்லது கூத்தாட்டுப் பொம்மைகள் போன்ற பொருளுக்குச் சம்பந்தப்பட்டவற்றின் உபயோகமும் உள்ளடக்கலாம்.

# கதைநேரத்திற்கு உதவும் குறிப்புகள்

உங்கள் பிள்ளை எமது கதை நேர அமர்வை மகிழ்ச்சியாக அனுபவிக்க இங்கு சில குறிப்புகளைத் தருகிறோம்:

- தயவு செய்து கதை நேரம் தொடங்குவதற்கு 5 நிமிடத்திற்கு முன் வந்து சேரவும்.
- தயவு செய்து கதை நேர அமர்வின் போது உங்களது பிள்ளையுடன் நீங்களும் உட்காரவும்.
- பொருத்தமான சமயங்களில் உங்களது பிள்ளை சேர்ந்து செயல்படுவதை உற்சாகப் படுத்துங்கள்.
- தயவு செய்து கதைகள் வாசிக்கப்படும் வேளையில் கதைக்க வேண்டாம் ஏனெனில் இது பிள்ளைகளினதும், கதை வாசிக்கும் நபரினதும் கவனத்தை திருப்பும்.
- உங்களது பிள்ளை அமர்வின் போது அமைதியற்றிருந்தால் தயவு செய்து கூட்டத்தின் பின் பக்கம் செல்லுங்கள் அல்லது அவன்/அவள் ஐ சில நேரத்திற்கு வெளியே கொண்டு செல்லுங்கள்.
- முடிவுறும் சமயத்தில் வண்ணத் தீட்டுக் கோல்கள், கத்தரிகள், மற்றும் வேறு கைவினை சாதனங்கள் அடுக்கப்பட்டு அழுக்குகள் தொட்டியில் போடப்படவேண்டும்.

# கதை நேரத்திற்கு சமூகமளிக்கும் குழுக்கள்

ஏதாவது குழு எமது வழக்கமான கதை நேர அமர்வுகளுக்கு சமூகமளிக்க விரும்பினால் முன்னதாகவே சிறுவர்கள் மற்றும் இளைஞர் பகுதியைத் தொடர்பு கொள்ள வேண்டும் ஏனெனில் நாங்கள் போதியவாறு அமர்வுக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்.

குழுக்கள் ஒரு தனிப்பட்ட அமர்வுக்கு ஒழுங்கு செய்ய முடியும்.

ஏதாவது குழுக்கள் கதை நேர அமர்வு ஒன்றிற்கு ஒழுங்கு செய்ய விரும்பினால் சிறுவர் மற்றும் இளைஞர் பகுதியை 9840 9960 இல் தொடர்பு கொள்ள வேண்டும்.

